**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 127/2022**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.தங்கவேல் ராஜ் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.12.**2024.**

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மணப்பாறை உட்கோட்ட ரோந்து உட்பிரிவில் முதல் நிலை காவலலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2021ம் தேதி மணப்பாறை காவல் நிலைத்தில் பணியில் இருந்த நானும், இதயதுல்லா என்பவரும் நிலையத்தில் இருக்கும் ஆய்வாளர் அவர்கள் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மணப்பாறை மோர்குளம் பகுதியில் கண்காணித்தபோது எதிரி எங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை பிடித்து விசாரித்தபோது, மஞ்சள் பையில் இலை, தழைகளுடன் கூடிய கஞ்சா வைத்திருந்தார். அவரை பிடித்து விசாரித்தபோது நாகராஜ், த/பெ.கருப்பையா மோர்குளம் மணப்பாறை என்று கூறினார். அவரை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்யலாமா என்று கேட்டதற்கு தேவையில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன் அடிப்படையில் எதிரியிடம் சோதனை சம்மத கடிதம் எழுதி, எதிரியிடம் கையெழுத்து பெற்றும், அதில் நானும், இதயதுல்லா என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 2 கிலோ கஞ்சா இருந்தது. மேற்படி கஞ்சாவை சோதனை செய்வதற்காக பகுப்பாய்விற்காக எடுத்து தலா 50 கிராம் எடுத்து SHO சீல் ஒரு கவரில் எடுத்து, மீதமுள்ள 1.950 கிராம் மற்றொரு கவரில் வைத்து SHO சீல் வைத்தும் அதே பையில் வைக்கப்பட்டது. எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், இதயதுல்லா என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்பு வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, அதில் நானும், இதயதுல்லா என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்பு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து கு.எண்.1112/2022,

சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) NDPS Act- ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகவும், சோதனை சம்மத கடிதம் **அ.த.சா.ஆ.2** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நாங்கள் ரைடுக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்று ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தவுடன் விஏஓ, தலையாரி, தனி நபர் சாட்சிகளை அழைத்து சென்றோமா என்றால் ஞாபகம் இல்லை. சோதனை சம்மத கடிதம், மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை யாரால் எழுதப்பட்டது என்றால் ஆய்வாளர் கையால் எழுதினார். அந்த ஆவணங்களில் தான் நான் கையெழுத்து செய்தேன். மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினோம். மகஜரில் மஞ்சள் என்ன வகையான பை என்று எனக்கு தெரியாது. குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி ஆய்வாளருடன் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் அங்கு எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும ஆவணம் ஆய்வாளர் என்னிடம் வாங்கிய வாக்குமூலம் என்றால் சரிதான். அதில் எதிரி மகாலெட்சுமி எந்த அச்சுறுத்தலோ துன்புறத்தலோ இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை என்று சொல்லியுள்ளேன். நான் சொன்ன நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றும் உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.